

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஐயம் மேச்சேரி ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று தீர்வு கண்டு பயனாளிகளிடம் சட்டமன்ற உறுப்பினர் க. சுந்தர் வழங்கினார். உடன் வாலாஜாபாத் வட்டாட்சியர் கருணாகரன், வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.குப்புசாமி, ஆர்.நரசிம்மன், எஸ்.எஸ்.கே.சத்யா, ஊராட்சி மன்ற தலைவர்கள் ரவி, திருமதி அஞ்சுகம், அருள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### இந்தியாவின் கல்வி ஆற்றல் மையமாக

# தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 14 -**

**“இந்தியாவின் கல்வி ஆற்றல் மையமாக தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

இந்தியாவின் கல்வி ஆற்றல் மையமாக தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது! NIRF Rankings 2024இல் அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களுடன், நமது மாநிலம் மற்றவர்களைவிட மிகவும் முன்னோக்கி நிற்பதுடன், தரமான கல்விக்கான அளவுகோலை நிர்ணயித்துள்ளது.

நமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முன்னணியில் இருக்கும் திராவிட மாடலுக்கு இது ஒரு பெருமையான தருணம்!

நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற முத்தாய்ப் பான திட்டங்களின் மூலம் நமது மாணவர்கள் உயர் கல்வியில் மென்மேலும் புதிய உச்சங்களைத் தொடுவார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ‘செபி’ தலைவரின் பதில், அவரது முதலீட்டை உறுதிப்படுத்துகிறது!

## ஹிண்டன்பர்க் நிறுவனம் மீண்டும் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஆக.14-*

‘செபி’ தலைவர் அளித்த பதில், அவர் சந்தேகத்துக்குரிய நிறுவனங்களில் முதலீடு செய்திருப்பதை உறுதிப்படுத்துகிறது என்று ஹிண்டன்பர்க் நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க், கடந்த ஆண்டு அதானி குழுமம் மீது பங்குச் சந்தை முறைகேடு குற்றச்சாட்டுகளை சுமத்தியது. அந்தக் குற்றச்சாட்டு குறித்து இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமே (செபி) விசாரிக்கட்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறிவிட்டது. இதற்கிடையே, அதானி குழும நிதி முறைகேட்டுடன் தொடர்புடைய நிறுவனங்களில் ‘செபி’ தலைவர் மாதபிபுச், அவருடைய கணவர் தவல் புச் ஆகியோர் முதலீடு செய்திருப்பதாக கடந்த 10-ந்தேதி ஹிண்டன்பர்க் புதிய குற் றச்சாட்டுகளை தெரிவித்தது. அதற்கு ‘செபி’ தலைவரும், அதானி குழுமமும் மறுப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், ஹிண்டன்பர்க் நிறுவனம், நேற்று முன்தினம்தனது ‘எக்ஸ்’ வலைத்தள பக்கத்தில் புதிதாக ஒரு பதிவு வெளியிட்டது. அதில் அந்நிறுவனம் கூறியிருப்பதாவது:

‘செபி’ தலைவர் எங்களது குற்றச்சாட்டுக்கு பதில் அளித்துள்ளார். ஆனால் அவர் அளித்த பதில், புதிய முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. பெர்முடா, மொரீஷியஸ்நாடுகளை சேர்ந்த சந்தேகத்துக் குரிய நிதியகங்களில் அவர்கள் முதலீடு செய்ததை பகிரங்கமாக உறுதிப்படுத்துகிறது. கவு தம் அதானியின் அண்ணன் வினோத் அதானி முறைகேடாக சேர்த்த பணத்தையும் அதில் முதலீடு செய்துள்ளார். அந்த நிதியம், தனது கணவர் தவல் புச்சின் சிறுவயது நண்பரால் நடத்தப்பட்டது என்பதையும் மாதபி புச் உறுதிப்படுத்தி உள்ளார். அந்த நேரத்தில் அந்த நண்பர், அதானி குழு மத்தின் ஒரு இயக்குனராக இருந்தார். அதானி விவகாரம் தொடர்பான முதலீட்டு நிதியங்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை ‘செபி’ ஏற்றுள்ளது. அவற்றில், மாதபி புச் முதலீடு செய்த நிதி யங்களும் அடங்கும். இது, நலன் முரண்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகும். இதை எங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறோம். மாதபி புச், இந்தியாவில் ஒன்றும், சிங்கப்பூரில் ஒன்றும் என 2 ஆலோசனை நிறுவனங்களை அமைத்ததை ஒப்புக் கொண்டுள்ளார்.

2017ம்ஆண்டு, தான் ‘செபி’யின் முழு நேர உறுப்பினர் ஆனவுடன் அந்த நிறுவனங்கள் செயலற்றதாகி விட்டதாகவும், 2019-ம் ஆண்டு அந்நிறுவனங்களை தனது கணவர் ஏற்று நடத்தியதாகவும் கூறியுள்ளார்.

ஆனால், கடந்த மார்ச் 31 ந் தேதி நிலவர பங்கு முதலீட்டா ளர்கள் பட்டியல் படி, அவர் தொடங்கிய அகோரா அட் வைசரி லிமிடெட்டின் 99 சத வீத பங்குகள் இன்னும் மாதபி புச்சிடம்தான் இருக்கின்றன.

அவருடையகணவரிடம் இல்லை. மேலும், சிங்கப்பூர் நிறுவனத்தில் 2022ம் ஆண்டு மார்ச் 16ந் தேதி வரை, மாதபி புச் 100 சதவீத பங்குகளை வைத்திருந்தார். ‘செபி’ தலைவர் ஆன 2 வாரங்களுக்கு பிறகுதான் அந்தப் பங்குகளை கணவர் பெயருக்கு மாற்றினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் நேற்று 13-8-2024 ஜமீன் பல்லாவரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். அதைத் தொடர்ந்து பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் கடந்த கல்வி ஆண்டில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10,000 ரூபாய் 7000 ரூபாய் 5000 என சொந்த நிதியிலிருந்து ரூபாய் 49000 கல்வி ஊக்கத்தை வழங்கி சிறப்பித்தார். இதேபோல் பல்லாவரம் மறைமலை அடிகளார் மேல்நிலை மேல்நிலைப் பள்ளி, குரோம்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி குரோம்பேட்டை மகாகவி பாரதியார் பெண்கள் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஜமீன் ராயப்பேட்டை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி திருநீர்மலை ஜெயஸ்ரீ அரசு உயர்நிலைப்பள்ளி அனகாபுத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆகிய ஒவ்வொரு பள்ளிகளிலும் தலா ரூபாய் 44 ஆயிரம் கல்வி ஊக்கத்தை வழங்கி சிறப்பித்தார். உடன் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பள்ளி தலைமை ஆசிரியர், மாமன்ற உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் மாவட்டத்தில்

# டிஜிட்டல் சேவைத் துறை மூலம் இ-சேவை மையம்!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

விருதுநகர், ஆக. 14 –

விருதுநகர் மாவட்டம் மதி சிறகுகள் தொழில் மையத்தின் மூலமாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைத் துறை மூலம் இசேவை மையம் 01.08.2024 முதல் செயல்பட துவங்கப்பட் டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், தெரிவித்துள்ளார்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஊராட்சிகளில் தொழில் மேம்பாட்டினை வலுப்படுத்தவும், தொழில் முனைவோ ருக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் வணிக மேம்பாட்டு உதவி சேவைகளை வழங்குவதற்கு மதி சிறகுகள் தொழில்மையம் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது.

மதி சிறகுகள் தொழில் மையம் மூலமாக தொழில் திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப விபரங்கள், திறன் பயிற்சி குறித்த விவரங்கள், சந்தை பற்றிய தகவல்கள், நிதி இணைப்புகள், பிறதுறை இணைப்பு கள், வணிக இணைப்பு கூட்டம், வழிகாட்டுநர்கள், துறை ரீதியான ஆலோ சனைகள் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மதி சிறகுகள் தொழில் மையத்தின் மூலமாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைத் துறை மூலம் இசேவை மையம் 01.08.2024 முதல் செயல்பட துவங்கியுள்ளது.

இதன் மூலம் மக்களுக்கு தேவையான சேவைகள் அனைத்தும் அரசு நிர்ணயித்துள்ள குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில் தொடங்குவதில் ஏற்படும் இடையூறுகளையும், தடைகளையும் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான சேவைகளும், அனைத்து துறை ரீதியான கடன் நிதி பெறுவதற்கு தொழில் திட்டம் தயாரித்தல், சட்டபூர்வ ஆவண பதிவுகள் தொழிலாளர் நல வாரிய அட்டை, வருவாய் நிர்வாகம் சார்ந்த ஆவணங்கள் (அடங்கல், ஜாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், இருப்பிட சான்றிதழ்,) மற்றும் அனைத்து துறை சார்ந்த ஆவணங்களும் பெற்று தரப்படும்.

மேலும் கடன் பெற்றவர்களுக்கான வணிக இணைப்பு கூட்டம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன்கிழமை அன்று மதி சிறகுகள் தொழில் மையத்தில் வைத்து நடத்தப்பட்டு வருகிறது. இச்சேவை மையத்தை அனைத்து வட்டாரங்களைச் சார்ந்த நபர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.


